**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO.407/ 2023**

Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 18.08.2025 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மோகன் | Age | : | |
| Father's Name | : | ராமசாமி | Village | : | |
| Calling | : | | Taluk | : | |

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மனுதாரர் நிறுவனம் சார்பாக வழக்கை நடத்துவதற்காக தனியாக எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தான் இந்த வழக்கில் 3-ம் மனுதாரர் ஆவேன். விபத்து சம்பந்தமாக நான்தான் புகார் கொடுத்தேன். 21.05.2021-ம் தேதி காலை 5.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 12 மணி நேரத்திற்கு பின்பு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் பதிவு செய்த வழக்கு இன்றும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1-ம் எதிர்மனுதாரர்தான் வாகனத்தை ஓட்டினார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

சேதம் அடைந்த மின்மாற்றியை நான் பார்வையிட்டேன். சேதத்தின் மதிப்பு நான் தான் கணக்கிட்டேன். மின்மாற்றிக்கு ஏற்பட்ட சேதம் எந்த அடிப்படையில் கணக்கீடு செய்தேன் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் பேரில் காவல்துறையினர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்களா என்று தெரியவில்லை. விபத்து நடைபெற்ற இடத்தில் இருந்த சி.சி.டிவி. பதிவுகளை வாங்கி பார்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2-ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை.

சேதம் அடைந்த மின்மாற்றிக்கு ஏற்பட்ட செலவினங்கள் குறித்து அசல் ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனம் 3-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றும், விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றும், காப்பீடு விதிமுறை மீறல் எதுவும் இல்லை என்றும், எனவே, இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் 3-ம் எதிர்மனுதாரர்தான் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. சேதம் அடைந்த பொருட்களுக்கு தனியாக மதிப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அதற்கான மதிப்பீடு தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய மின்மாற்றியின் மதிப்பீட்டை முறையாக காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

எந்த தேதியில் புதிய உபகரணங்கள் மாற்றப்பட்டது என்பது பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டபோது நான் இருந்தேன். நான் போலீசார் பார்வையிட்டபோது சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 1-ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றாலும், நாங்கள் தாக்கல் செய்துள்ள சேதம் மதிப்பு முறையாக இல்லை என்றாலும், எனவே இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.